DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVALLUR

O.S.No. 444/2022 PW 2

Name லீலாவதி Age 70

Father's Name Village

Taluk

Solemnly affirmed in accordance with the provision of Act of 1873 on the day of

21.08.2024.

குறுக்கு விசாரணை

நான் சென்னையிலேயே 42 வருடங்களாக குடியிருக்கிறேன். நான் 1958ல் பிறந்தேன். வாதிகள் எனது உறவினர்கள்தான். வழக்கு சொத்தின் சர்வே எண்கள் தெரியாது. நான்கு எல்லைகளின் விவரங்கள் எனக்கு தெரியாது. ஜெயலட்சுமியம்மாள் எப்பொழுது கிரையம் வாங்கினார் என்றால் தெரியாது. சுமார் 50 வருடங்களுக்கு முன்பு வாங்கினார். யாரிடமிருந்து வாங்கினார் என்று எனக்கு நேரிடையாக தெரியாது. நான் ராஜப்பா, பெரியநாயகி, கண்ணம்மாள் ஆகியோர்களை நேரிடையாக பார்த்தது கிடையாது. எங்கே குடியிருந்தார்கள் எப்படி வாழந்தார்கள் என்று எனக்கு நேரிடையாக தெரியாது. நான் எந்த கிரைய பத்திரங்களிலும் சாட்சி கையொப்பம் போடவில்லை. பத்திரங்கள் எழுதியது, கையெழுத்து போட்டது யார் என்ற விவரம் எனக்கு தெரியாது. கிராமத்தில் தகராறு செய்த பெயர்கள் எனக்கு தெரியாது. தகவல்கள் கிராமத்தார் சொல்லி தெரியவில்லை. தாவா சொத்து நான் பார்க்கவில்லை.